# விபூதி விளக்கம்.

துடிசைகிழார் அ. சிதம்பரனர்

விலை அணு 4.

நூல் பிரிவு I.

# விபூதி விளக்கம்.

இது

ஆதிசைவப் பாரம்பரையில் வந்த

துடிசைகிழார் அ. சிதம்பரனர்

M.T.A.S; M.T.S; AND M.S.S.E.

என்பவரால்

பல நூல்களினின்றும் அவ்வப்போது குறித்து வைத்திருந்ததை

உத்திரமேரூர்

சைவசித்தாந்த சபையாரால்

பலருக்கும் உபயோகமாகும்பொருட்டு

வெளிப்படுத்தப்பட்டது.

சென்னை:

மெய்கண்டான் அச்சியந்திரசாலை.

1913.

உ

கணபதி துணை.

# பதிப்புரை.

சைவர்காள்!

இச்சிறு புத்தகத்தின்கண் பொதிந்துள்ள விடயங்கள் பல அரிய பெரிய நூல்களினின்றும்,

"பலவ கைப்படு தானமுந் தருமமும் பண்புங்
குலவொ ழுக்கமு ஞானமுங் கருணையுங் குழைவு
மிலகு பத்தியும் நீதியும் பொறுமையு மென்னு
நலப யிர்த்தொகை விளைவயல் கொங்குநன் னாடு."

என்று பெரியோர்களால் புகழப்பெற்ற கொங்கு நாட்டில், சமயாசாரியராகிய ஸ்ரீசுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பெற்ற திருத்துடிசையம் பதியின்கண் அவதரித்தவரும், சைவசித்தாந்த கருத்துக்களையும், தமிழ்நாட்டின் சரிதங்களையும் அதிநுட்பமாக ஆராய்ந்து தெளிந்தவரும், சீலம், பொறை, அடக்கமாதிய நற்குணங்கள் நிறைந்தவரும், தேவார திருவாசக முதலிய பன்னிரு திருமுறைகளையும் பண்ணோடு எங்களுக்கு ஓதுவித்தவரும் ஆகிய ஸ்ரீலஸ்ரீ துடிசைகிழார் அ சிதம்பரனார் என்பவரால் திரட்டப்பட்டவை. அவைகளை எல்லாரும் தெரிந்து ஆனந்திக்கவேணும் என்று கருத்துக்கொண்டு யாங்கள் அவரைப் பல்காலும் வேண்ட அவர் கருணை மீக்கூர்ந்து கொடுத்த விடயங்களை பலருக்கும் உபயோக மாகும்பொருட்டு வெளிப்படுத்தினோம். சைவர்கள் ஒவ்வொருவருக்கும் இப்புத்தகம் இன்றியமையாதது. விபூதியைப்பற்றிய வரலாற்றினை இப்புத்தகம் செவ்வனே விளக்குவது. பலநாள் பல நூற்களிலும் துருவித் தெரிந்துகொள்ளக்கூடிய சங்கதிகளை இப்புத்தகத்தை ஒருதடவை வாசிப்பதால் தெரிந்துகொள்ளலாம். ஆகையால் சைவர்களா யிருப்பவர் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தை வாங்கி எம்மை மகிழ்விக்கவும் இன்னும் அநேக நூல்களை இந்தமாதிரியில் வெளிப்படுத்துமாறு எம்மை ஊக்குவிக்கவும் வேண்டுகின்றோம்.

இப்படிக்கு

உத்திரமேரூர். சைவசித்தாந்த சபையார்.

# இனி வெளிவரும் நூல்கள்.

| | | |
|---|---|---|
| ஒழுக்கநூல் பிரிவு. | | 2. ஸ்ருத்திராக்ஷ விளக்கம். |
| ,, | | 3. நித்தியகரும விளக்கம். |
| ,, | | 4. போசன விளக்கம். |
| ,, | | 5. ஆலய விளக்கம். |
| ,, | | 6. மனைவாழ்க்கை விளக்கம். |
| ,, | | 7. சமயபேத விளக்கம். |
| வரலாற்றுநூல் பிரிவு | (1) | 8. துடிசைப் புராணம். |
| ,, | (2) | 9. பண்முறை விளக்கம். |
| ,, | (3) | 10. தமிழுலகம். |
| ஞானநூல் பிரிவு | (1) | 11. சிவஞான போத முதனூல் விளக்கம். |
| ,, | (2) | 12. மனத்திற் கிசைந்த மான் (A Novel). |
| ,, | (3) | 13. சுந்தரமூர்த்தி நாயனார் சரித்திர விளக்கம். |

உ

கணபதி துணை.

# உரிமையுரை.

சைவசமய ஒழுக்கம் இது எனப் பலதடவைகளில் எனக்குப் புத்திமதிகளைப் புகட்டினவரும்; என்னிளம்பருவத்துக் கல்வியையும், ஒழுக்கத்தையும், இடைவிடாமல் கவனித்துத் தன் தேகசிரமத்தையும் தான் வருந்திச் சம்பாதித்த பொருளையும் பொருட்படுத்தாது என் அறிவு அபிவிருத்தி ஒன்றையே நாடினவரும்; தேவார திருவாசகங்கள் முதலிய பன்னிரு திருமுறைகளையும், திருப்புகழையும் பண்ணோடு கல்லும் உருகப்பாடும் ஆற்றலுடையவரும்; எனக்குச் சித்தாந்த நுணுக்கங்களைத் தமது அருட் [பெ]ருக்கோடு குழைத்து ஊட்டினவரும்; திருத்துடிசையம்பதியின்கண் தன் இளம்பருவத்து யாரோ ஒருவன் கொடுத்த நஞ்சைத் தெரியாமல் அயின்று, தன்குல முதற்கடவுளான ஸ்ரீநஞ்சுண்டீஸ்வரர் கிருபையால் யாதொரு மருந்தும் இல்லாமலே பிழைத்து, தெய்வந் தொழுவார்க்குச் சேதமில்லை என்னும் உண்மையை வெளிப்படுத்தினவராகிய என் பிதா ஸ்ரீலஸ்ரீ அர்த்தனாரீஸ்வர முதலியாருடைய தவத்தினால் அவதரித்தவருமான,

**ஸ்ரீலஸ்ரீ அ. நஞ்சப்ப முதலியார்**

என்னும் என் அருமை பெருமை வாய்ந்த சகோதரர் சென்ற விரோதிகிருது௵ தைமீல் உயிர்துறந்தபோது, அவர் அடியேன்மீது பாராட்டிய அருட்பாங்கை நினைந்து நினைந்து கனிந்துருகுதற்கு ஓர் அறிகுறியாக இப்புத்தகம் அடியேனால் வகுக்கப்படுகின்றது.

துடிசைகிழார் அ. சிதம்பரனார்.

722
294-551

# மெய்யுரை.

"கங்காளன் பூசுங் கவசத் திருநீற்றை
மங்காமற் பூசி மகிழ்வரே யாமாகில்,
தங்கா வினைகளும்; சாரும் சிவகதி;
சிங்கார மான திருவடி சேர்வரே."—(திருமந்திரம்)

"ஆனநீற்றுக்கவச மடையப்புகுமின்கள்,
வானநாடாள்வோநாம் மாயப்படைவாராமே."(திருவாசகம்)

அ. சி.

# இந்நூல் எழுதுவதற்கு ஆதாரமாயிருந்த நூல்கள்.

1. காமிகம்.
2. சைவபூஷணம்.
3. சைவபூஷண சந்திரிகை.
4. அகோர சிவாசாரியார் பத்ததி.
5. சோமசம்பு சிவாசாரியார் பத்ததி.
6. திரிலோசன சிவாசாரியார் பத்ததி.
7. சைவசமய நெறி.
8. வாசிட்ட லிங்கம்.
9. திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் தேவாரம்.
10. திருவாசகம்.
11. திருமந்திரம்
12. காருடபுராணம்
13. ஸ்காந்தம்
14. பேரூர்ப்புராணம்
15. திருக்கழுக்குன்றப்புராணம்.
16. ஆறுமுகநாவலர் பாலபாடம்.
17. ,, சைவசமய வினாவிடை.
18. திருவிளையாடல் புராணம்.
19. Tamilian Antiquary, No 1 of 1907.
20. பஸ்மமகாத்மியம்.
21. பிரகத் ஜாபாலோபநிஷத்.
22. பஸ்ம ஜபாலோபநிஷத்
23. ஔவை நூல்.
24. கலித்துறை.
25. அகத்தியர் தேவாரத்திரட்டு.
26. விஜயகேசரிப்பத்திரிகை (புத்தகம் 1 இலக்கம் 9).
27. ஆதித்ய புராணம்.
28. கபிலர் அகவல்.
29. போதாயன கல்பசூத்திரம்.
30. திருத்துடிசைப்புராணம்.
31. History of Vijayanagar.

# தந்துரை.

- விபூதி
  - இயற்கை
    - I. அகற்பம்
  - செயற்கை
    - வைதிகம்
      - II. புராதனி.
      - III. சத்தியோஜாதை.
    - இலௌகிகம்
      - சைவம்.
        - IV கற்பம்.
        - V அநுகற்பம்.
        - VI உபகற்பம்.
      - அசைவம் VII.

*N. B:*—ஆரியர்கள் இத்தமிழ் நாட்டிற்கு வருவதற்கு முன்னம் செயற்கை விபூதியில் வைதிகம் இலௌகிகம் என்னும் பிரிவுகள் கிடையா. சைவம் அசைவம் என்னும் பிரிவுகளே உண்டு.

ஆரியர் தென்னடு சேர்ந்து, தமிழர்களுடன் கலந்து, தமிழர்களுடைய நாகரீகங்களையும், வழக்க ஒழுக்கங்களையும், நடையுடை பாவனைகளையும் அநுசரிக்கத் தொடங்கித் தமிழ்நூல்களையெல்லாம் மொழிபெயர்த்தோம் என்று சொல்லாமலே மொழிபெயர்த்த ஞான்று; செயற்கை விபூதியில் வைதிக இலௌகிக விபூதிகள் என்னும் பிரிவுகளை உள்நுழைத்து விட்டார்கள்

ஆகையால் வைதிகவிபூதியின் பிரிவுகளான புராதனிசத்தியோஜாதை என்பவைகள் தமிழர்களுக்கு உரித்தானவையல்ல. அவைகள் ஆரியர்களுக்கே உரித்து. இப்போது வழக்கத்திலும் காணலாம்.

ஆகையால் இயற்கை விபூதியான அகற்பவிபூதியும், செயற்கை விபூதியில் கற்ப, அநுகற்ப, உபகற்ப, அசைவம் ஆகிய ஐந்துவித விபூதிகளே ஆதிகாலந்தொட்டு வழங்கி வருவனவாம்.

உலகத்தில் உள்ள எல்லா மொழிகளிலும் தமிழ்மொழி ஒன்றுமே இலக்கண வரம்பு பெற்றது அது

"கண்ணுடைப் பெருங்கடவுளும் கழகமோடமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்த விப்பசுந்தமிழ் ஏனை
மண்ணிடைப்பிற விலக்கண வரம்பிலாமொழிபோல்"

என்பதாலும்,

"Grammatical gender has been more fully and systematically developed in the Dravidian tongues than in, perhaps, any other languages in the world"

என்று Mr. Caldwell துரை அவர்கள் கூறுமாற்றாலும் அறியலாம்.

தமிழிலக்கணத்தில் இயற்கைப்பாகு பாடுகள் அதிகமாய்க் கூறப்பட்டிருக்கின்றன. மற்றைப்பாஷைகளில் அவ்விதப்பாகுபாடுகள் காண்டல் அரிது. திணைப்பாகுபாடுகளும், காலப்பாகுபாடுகளும், உயர்திணை, அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம்புறம் என்னும் பொருட்பாகு பாடுகளும் இன்னோரன்ன பிறவும் தமிழ்மொழி ஒன்றற்கே உரித்து.

ஆகையால் தமிழர்கள் இயற்கையாகப் பாகுபாடுகள் செய்திருந்தார்கள் என்று அறியக் கிடக்கின்றது. செயற்கையும் அச்செயற்கையில் அலங்காரமும் தெய்வீகமும் கூறுவது ஆரியர் வழக்கு எனச்செவ்வனே தெளிவாகின்றது.

ஆகையால், கூர்ந்து நோக்குமிடத்துத் தமிழர்கள் பிறப்பினுல் ஜாதிகள் ஏற்படுத்தவில்லையென்றும் இயற்கையாக உள்ள மனோபாவனைகளை ஒட்டிப்பாகு பாடுகள் செய்திருந்தார்கள் என்றும் தோன்றுகிறது.

கடவுள் இல்லையென்று சொல்லுகிறவன் நாஸ்திகன். அவன் தற்கால ஜாதியில் எந்த ஜாதியில் சேர்ந்தவனுனுலும் சரி.

இதுபோலவே, சைவத்தில் உட்பிரிவுகள் வகுத்திருந்தார்கள் அவை வருமாறு:—

அநாதிசைவர்.

(1) பரமசிவம் (பரமான்மா).

மகா சைவர்.

(2) விஞ்ஞானகலர், பிரளயாகலர்.

ஆதிசைவர்.

சகலரில் (3) பரம்பரைச் சைவர் (அதாவது தோன்றிய நாண்முதல் கொல்லாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை, கள்ளுண்ணாமை, பிறர்மனை நயவாமை, பொய்யாமை முதலிய சைவதருமங்களில் சிறிதும் வழுவாதவர்களாயிருந்து கொண்டு சிவனை வழிபடுவோர்

அநுசைவர் or ஒட்டியசைவர்.

(4) பரம்பரைச் சைவரினின்றும் சிறிது காலத்துக்குப் பின்விலகி பின்வந்து சேர்ந்தவர்.

அவாந்தரசைவர் or ஒவ்வோர்காலங்களில் சைவரானோர்.

(5) அசைவரி னின்றும் சைவரானோர்.

அந்தியசைவர்.

(6) அசைவர்களாகவே இருந்துகொண்டு ஒவ்வோர் காலங் களில் சைவதருமங்களை அநுட்டிப்பவர்.

பிற வற சைவர் or பிறசைவர்.

(7) அசைவர்களாகவே இருந்து கொண்டு சிவபெருமானை வழிபடுவோர்.

ஆன்மகோடிகளில் சிவனை வழிபடுவோரில் இவ்வறுவகைச் சமயத்தார் தவிர இயற்கையாக வேறு விதம் இல்லையெனக்கூற லாம். இவைகளே இயற்கைப் பாகுபாடுகள்.

ஆரியர் நுழைந்தபின்பு பின் வருமாறு தங்களுக்குள் வகுக் கலுற்றார்:—

அநாதிசைவர்.

1. பரமசிவன்.

ஆதிசைவர்.

2. சிவன் முகத்திலுற்பவித்தவிப்பிரர் (ஆரியரில் ஓர் வகுப் பார் அதாவது கோவில் பூசைசெய்வோர்.)

மகா சைவர்.

3. ஆரியரில் ஆதிசைவரல்லாத மற்ற பிராமணர்—ஸ்மார்த்தர் முதலாயினோர்.

அநு சைவர்.

4. க்ஷத்திரியர், வைசியர்.

அவாந்தர சைவர்.

5. சூத்திரர்.

பிற வற சைவர்.

6. அநுலோம, பிரதிலோம சங்கர ஜாதிகள்.

அந்திய சைவர்.

7. மேற்சொன்னவர் அல்லாதவர்கள்.

சற்று க்கவனியுங்கள்.

ஆரியர் வருவதற்கு முன்னம் நாற்சாதிப் பகுப்பு கிடையாது. "நால்வகைச்சாதியிந் நிலத்தில் நாட்டினீர்" எனமுழங்கும் கபிலர் அகவலாலும் பிற நூற்களாலும் தெரியலாம்.

ஆரியர்களுக்கு சிவபெருமான் தெய்வமும் அல்ல என்பது அவர்களுடைய இருக்கு முதலிய வேதங்களே கூறும். அவர்களும் தென்னுடுவந்து சேர்வதற்கு முன்னம் சிவனை வழிபட்டதாக ஏற்படவில்லை. (Vide "The History of Vedic Hinduism p. 77 Brahmanic period)

ஆரியர்கள் சிவபெருமானைச் சூத்திரர் தெய்வம் எனவழங்கி வந்ததையாவரும் அறிவார்கள். (ஆரியர்கள் தமிழர்களைச் சூத்திரர்கள் எனவழங்குவது, தமிழர்கள் ஆரியர்களை மிலேச்சரென வழங்கல்போலும். National word)

ஆகையால் மேற்சொன்ன சைவப்பாகு பாடுகளும் ஆரியர்களுக்குள் கிடையா என்பது போதரும். தமிழர்கள் ஆரிய நான்கு ஜாதிகளில் சேர்ந்தவர்கள் அல்ல. அப்படி ஆரியர்கள் செய்தபாகு பாடுகள் சரிதானென்றால், தமிழர்கள் எல்லாம் அந்திய சைவர்கள் ஆகின்றார்கள். அப்படி அந்திய சைவர்களாகத் தமிழர் இருப்

பதாக அவர்களுடைய வழக்க ஒழுக்கங்களிலும் நடையுடை பாவனைகளிலும் ஏற்படவில்லை.

ஆகவே,

அரியசதாசிவ னென்போனனாதிசைவன் அவன்பால்
அவதரித்த சிவமறையோர் ஆதிசைவர் இவர்பால்
உரிய சிவதீக்கைபெற்ற பூசுரர் மாசைவர் உயர்ந்த
அரசன்வணிகன் அநுசைவர் ஆவார்
பெரியகுவளைப்புயத்தோன் அவாந்தர சைவர் சீர்பெறு
சவனனாதி யனுலோமர் பிறவரராம்
விரியவனிமிசை யொழிந்தோர் அந்தியசைவத்தோர்
விரித்திடுமேழ் சைவவித மிவையென நூல் விளம்பும்.

எனக்கூறியது ஆரிய நான்கு ஜாதிகளையும் ஏழ்சைவத்திற்குட்படுத்திக் கூறியதே யொழிய தமிழர்களுக்குச் சொன்ன பாட்டு அல்ல என்பது வெளிப்படை.

இவற்றின் விரிவெல்லாம் சமயபேத விளக்கத்தில் பார்க்கக் காணலாம்.

விபூதிவிளக்கத்துக்கு அறிய வேண்டிய பாகத்தை மட்டும் இங்கு எடுத்து எழுதினும்.

உ

கணபதிதுணை.

# புறவுரை.

## "இந்தியா" என்னும் பெயர் வரலாறு.

தற்காலம் இந்தியாவென வழங்கும் நாட்டிற்கு சங்க இலக்கியங்களிலாவது ஏனைய புராதனநூல்களிலாவது இந்தியாவென வழங்கக் கண்டிலேம்.

ஆரியர் மொழிபெயர்த்துக் கூட்டியும், கழித்தும், விளக்கியும், திருத்தியும் எழுதிய நூல்களில் இந்தியாவிற்கு பரதகண்டம் என வழங்கக் காண்கிறோம்.

ஆரியர் இவ்விந்தியாவிற்கு வருவதற்குமுன் இவ்விந்தியா தனித்தனி 56 தேயங்களாகப் பிரிக்கப்பட்டிருந்தது என அறிகிறோம்.

ஆரியர் இவ்விந்தியாவிற்கு வருவதற்கு முன்னேயே பினீசியர்களும், அராபியர்களும், யூதர்களும், பாரஸீகர்களும் தரைமார்க்கமாயும் தண்ணீர் மார்க்கமாயும் தமிழர்களுடன் வியாபாரம் செய்துகொண் டிருந்தார்கள் எனவும் அறிகிறோம்.

பாரஸீகரும் அராபியரும் பெரும்பாலும் தரைமார்க்கமாய் கைபர், காபூல் கணவாய்களின் மார்க்கமாய் தமிழர்களுடன் வியாபாரம் செய்துகொண் டிருந்தார்கள்.

உலகத்தில் எந்த இடத்தில் உள்ளவர்களும் மயில் இறகு, மிளகு, சந்தனம், கிராம்பு, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, தேக்கு முதலியன வேண்டுமானால் தமிழ்நாட்டிற்குத் தான் வரவேண்டும்.

பாரஸீகர்கள் ஒட்டை மூலியமாய் பேரீச்சம்பழம், முந்திரிப் பழம், பெருங்காயம் முதலியவைகளை ஏற்றிக்கொண்டு தமிழ்நாட்

டிற்கு வந்து மேற்சொன்ன மயில் இறகு, மிளகு முதலியவைகளை மாற்றிக்கொண்டு போவார்கள்.

இப்படி யிருந்துகொண்டிருக்க ஆரியர் யூரல்மலை, காஸ்பியன் கடல்முதலிய பிரதேசங்களினின்றும் வந்து சிந்துநதி தீரத்தில் குடியேறினார்கள். குடியேறி தமிழர்களுடன் மலைந்து போர் செய்தும், வஞ்சனையினாலும் தமிழர்களை அவ்விடத்தினின்றும் ஓட்டிவிட்டு பஞ்சநதிதீரத்தில் நிலையான இராஜ்ஜிய ஸ்தாபனம் செய்துகொண்டார்கள்.

அப்போது, வழக்கப்பிரகாரம் பாரஸீகர்கள் ஒட்டை மூலியமாய்ச் சரக்குகளை ஏத்திக்கொண்டு தமிழ்நாட்டிற்கு கைபர், காபூல் கணவாய்களைக் கடந்து, ஆரிய நாட்டையும் கடந்து வந்தபோது ஆரியர்கள் மேற்படி பாரசிகர்களை வழிமறித்து அடித்துச் சொத்துக்களைப் பிடுங்கிக்கொண்டிருந்தார்கள். எனக்கேட்டிருக்கிறோம்.

பாரசிகர்களை ஆரியர்கள் வழிமறித்து அடிக்கவே, பாரசீகர்கள் ஆரியர்களை "ஹிந்து" "ஹிந்து" என்று கூப்பிட்டார்கள். "ஹிந்து" என்னும் வார்த்தை பாரசிக வார்த்தை பாரசிகத்தில் "ஹிந்து" என்னும் வார்த்தைக்குத் "திருடன், கொள்ளைக்காரன்" என்று அர்த்தம். (Vide The History of Vijayanagar by B. Suryanarayan Rao).

ஆகையால், அப்பாரஸீகர்கள் ஆரியர்களுக்கு இட்ட பெயரானது பின்னால் ஆரியர்கள் குடியேறின ஆரியா வர்த்தத்துக்கு ஆயிற்று என்பது சரிதக்காரர் துணிபு.

பிறகு, ஆரியர்கள் தமிழ்நாடுகள் எல்லாவற்றையும் ஜெயித்து அரசாண்டதால் அவர்களுக்கு எல்லாம் "ஹிந்துக்கள்" என்றும், அவர்கள் ஜெயித்த நாடு முழுமைக்கும் "இந்தியா" என்றும் பெயர் ஏற்பட்டது.

அந்தப்பெயர் அப்படி வழங்கிவரவே அதனுடைய கெட்ட அர்த்தம் மறைந்துபோய் இடுகுறிப்பெயர் மாதிரி ஏற்பட்டுவிட்டது என்பது சிலபேருடைய கொள்கை.

நாடு "இந்தியன்" காபிக ...

அநேகம்பேர் இந்தியாவென்றால் இடுகுறிப் பெயராக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதன் பெயர்க் காரணம் மறைந்துபோகவே இந்தியாவென்னும் பெயர் இத்தமிழ்நாட்டிற்கு நிலைத்துவிட்டது என அறிகிறோம்.

தமிழர்களும் "இந்து" என்னும் பதத்தின் சரித்திரம் தெரியாமல் தங்களை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள். இந்தியாவில் வசிப்பதால் இந்துக்கள் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். இந்தியாவென்று எப்படி வந்தது என்றால் இடுகுறிப்பெயர் என்கிறார்கள்.

தமிழில் எல்லாப் பெயர்களும் காரணப்பெயர்களே (Vide மொழிநூல் by ம-ா-ா-ஸ்ரீ. கார்த்திகேய முதலியார்)

ஆனால், தொல்காப்பியர் "மொழிப்பெயர்க் கிளவி விழிப்பத் தோன்றா" என்று கூறிப்போந்தார்.

நன்னூலார், "இடுகுறி காரணப்பெயர்ப்பொதுச் சிறப்பின" எனப் பிறழ்ந்து, காலத்தை நோக்கியும், ஆரிய விலக்கணத்தை ஒட்டியும் கூறினார்.

ஆகையால், காரணப்பெயர்கள் காரணம் மறைந்துவிட்டால் இடுகுறிகளாக ஆவதும் உண்டு எனத் தெரிகிறது.

ஆகையால், தமிழர்கள் இந்துக்களும் அல்ல, ஆரியர்களும் அல்ல; தமிழர் தமிழர்களே. இவ்வைம்பத்தாறு தேசமும் இந்து தேசம் அல்ல; 56 தேசங்களே.

## ஜாதி வரலாறு.

ஆரியர் வருவதற்கு முன்னமே இத்தமிழ் நாட்டில் 18 ஜாதிகளும், 18 உபஜாதிகளும் தமிழர்களுக்குள் இருந்தனவென்றும், இப்போதும் இருக்கின்றனவென்றும் ஏற்படுகிறது. "டள்ளுப்பறை 18 ஜாதி" "பதினெண் குடிமக்கள்" என்னும் பழமொழிகளே சான்று பகரும்.

ஆரியர் வருவதற்கு முன்னமே தமிழ்நாட்டில் தமிழ்வேத ஆகமங்களும், கலைஞானங்களும், கோவில்களும் இருந்தனவெனத் தெரிகிறது.

ஆரியர்கள் வருவதற்கு முன்னமே தமிழர்கள் நாகரீகத்திலும் அறிவிலும் சகல கலைகளிலும் மேம்பட்டு இருந்ததாகவும் ஏற்படுகிறது.

ஆரியர்கள் இத்தமிழ் நாட்டிற்கு முதல்முதல் வந்தபோது அவர்களுக்குள் ஜாதிபேதம் கிடையாது. நாகரீகம் கிடையாது. அவர்கள் பேசும் ஆரியபாஷைக்கு எழுத்துக்கள் கிடையாது. இப்போது அவர்களுக்கு ஏற்பட்டு இருக்கும் வேதாகமப் பிரிவினைகளும் கிடையாது. யாதொன்றும் இல்லாதவர்களாயிருந்தார்கள். அவர்கள் தமிழ்நாட்டிற்கு வந்தபிற்பாடுதான் ஆரியாவர்த்தத்தை ஏற்படுத்திக்கொண்டு தமிழர் நாகரீகங்களை மெள்ள மெள்ளக் கற்றுக்கொண்டார்கள்.

தமிழின் பிரிவாகிய பஞ்சதிராவிடத்தில் ஒன்றாகிய மகாராட்டிர பாஷையை நோக்கித் தங்கள் பாஷைக்கு எழுத்து ஏற்படுத்திக்கொண்டார்கள். அதுதான் தேவநாகரம். நாற் ஜாதிபேதங்கள் பிற்பாடுதான் ஏற்படுத்திக் கொண்டார்கள். இருக்காதி நால்வேதங்களை எழுதிக்கொண்டார்கள்.

பின்னால், தென்னாடு சேர்ந்து தமிழர்களுடன் அதிக உறவாடிக் கலந்தபோது தமிழ் எழுத்துக்களை அநுசரித்துத் தங்கள் பாஷைக்குக் கிரந்த எழுத்துக்களை அமைத்துக் கொண்டார்கள்.

தமிழ் நூற்களை யெல்லாம் தங்கள் பாஷையில் கிரந்த எழுத்துக்களால் எழுதிக்கொண்டார்கள்.

ஆகையால், பிராமண, க்ஷத்திரிய, வைசியச் சூத்திரர் என்பன ஆரிய ஜாதிவகுப்புக்கள்.

தமிழர்கள் வேறு, மேற்சொன்ன நான்கு ஜாதிகளும் வேறு.

மகம்மதியர்களுள்ளும் ஷேக், சையத், சுன்னத், பட்டான்ஸ் என்னும் நான்கு பெரிய ஜாதிகள் உண்டு.

3

கிறிஸ்தவர்களுள்ளும் கிரீக்சர்ச், ரோமன் காத்தலிக், பிராடெஸ்டன்ட் என்னும் மூன்று பெரிய பிரிவுகளுண்டு. அது போலவே, தமிழர்களுள்ளும், 18 பெரிய ஜாதிகளும், 18 உபஜாதிகளும் உண்டு.

தமிழர் வேறு, ஆரியர் வேறு. ஆரிய நான்கு ஜாதிப்பிரிவுகள் தமிழர்களுக்கு ஒவ்வாது. தமிழர் 36 ஜாதிப்பிரிவுகள் ஆரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் ஒவ்வாது.

குமரிகண்டத்தில் (இலங்கையில்) (*i.e.*, Continent of Lemuria) இருந்த நூல்கள் எல்லாம் பிரளயங்களில் கடலுக்கிரையாயின. பிற்பட்டுத் தமிழ் நாட்டரசர்கள் சேகரித்து வைத்திருந்த நூல்களெல்லாம் வியாசர்காலத்திலும், வைதுல்லியன் காலத்திலும், சமணர் காலத்திலும், மகம்மதியர் காலத்திலும் நெருப்புக்கிரையாயின.

மேற் சொன்ன இரண்டு காரணங்களினாலும் இறவாமல் எஞ்சி நின்ற அநேக நூல்கள் செல்லுக்கிரையாயின. (White ants)

ஆகையால், தமிழ் நூல்கள் எல்லாம் ஒன்றும் அகப்படாமல் போகவே ஆரியராசாங்கத்துக்குப் பின்னிட்ட வித்தவான்கள் எல்லாம் வியாசர் கட்டுப்பாடு செய்து எழுதிய நூல்களையே ஆதாரமாக எண்ணி, தமிழர்களை எல்லாம் ஆரியர்கள் என்று சரித்திரம் தெரியாததால் கூறிப்போனார்கள். ஆரியர்கள் தமிழர்களிடத்தினின்றும் தங்களுக்கு வேண்டியது எவ்வளவோ அவ்வளவு வரைக்கு மாத்திரம் தெரிந்து கொண்டு தங்களுடைய இனத்துக்குத் தக்கவாறு எழுதிவைத்துக் கொண்ட சுருதி, ஸ்மிருதி, இதிகாசங்களையே தமிழ் வித்வான்கள் உண்மையான முதனூல்கள் என்று நம்பித்தாங்கள் அவைகளை அநுசரித்தும் பிறரை அநுசரிக்கும்படி ஏற்பாடு செய்தும்போனார்கள்.

ஆகையால், தமிழ் வித்துவான்கள் எல்லாம் தமிழர்களையும் ஆரியர்கள் என்றும், தமிழர்களும் ஆரிய நான்கு ஜாதிகளுக்குள் சேர்ந்தவர்கள் என்றும், சரித்திரம் தெரியாததால் விதியில்லாமல் ஒப்புக்கொண்டார்கள். அதன்படியே அநேக நூல்களும் எழுதி

விட்டார்கள். தற்காலம் சரித்திரம் தெரியாத தமிழ் வித்வான்களும் அப்படியே எழுதத்தயாரா யிருக்கிறார்கள்.

மேற்சொன்ன வித்துவான்களுடைய கூற்றைக் கேட்டுத் தமிழர்களில் அநேகர் தங்களைப் பிராமணர்களென்றும், அநேகர் க்ஷத்திரியர் என்றும், அநேகர் வைசியர் என்றும், அநேகர் சூத்திரர் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். தங்களுக்குள்ள 18 ஜாதிப் பிரிவுகளை மறந்துவிட்டார்கள்.

உதாரணமாக:—

| | | |
|---|---|---|
| கருணீகர் ..................... | தங்களை.... | சௌரப்பிராமணர் என்றும், |
| பொன்கொல்லர் முதலியோர் | ,, | விஸ்வப்பிராமணர் என்றும், |
| வேளாளரிற்சிலர் | ,, | பிராமணர் என்றும், |
| ,, | ,, | க்ஷத்திரியர் என்றும், |
| ,, | ,, | வைசியர் என்றும், |
| ,, | ,, | சச்சூத்திரர் என்றும், |
| ,, | ,, | சூத்திரர் என்றும், |
| சாணார்<br>மறவர்<br>கள்ளர்<br>வன்னியர் | ,, | க்ஷத்திரியர் என்றும், |
| வாணியர் | ,, | வைசியர் என்றும், |
| குலாலர் | ,, | பிரமகுலத்துப் பிராமணர் என்றும், |
| யாதவர் | ,, | க்ஷத்திரியர் என்றும் சொல்லிக் கொள்ளுகிறார்கள். |

மேற்சொன்னவர்க ளெல்லாம் தமிழர்களாயிருந்தும் தங்களுக்கு அனாதியே ஏற்பட்டிருக்கும் பிரிவுகளை விட்டுவிட்டு ஆரிய ஜாதி வகுப்புகளில் பூனூல் ஒன்றை மாட்டிக்கொண்டு நுழையப் பார்க்கிறார்கள். (Vide Mr. Sundaram Pillai's sayings in Tamilian Antiquary. No. 2.)

உலகத்தில், மகமதியர் தங்களினம் அல்லாதவர்களை காப்பிரிகள் என்றும்; கிறிஸ்தவர்கள் தங்களினம் அல்லாதவர்களை அஞ்

ஞானிகள் என்றும்; சீனதேசத்தார் தங்களினம் அல்லாதவர்களை நரகர்களென்றும்; கிரீக்ஸ் தங்களினம் அல்லாதவர்களை எரிடிக்ஸ் என்றும்; ஆரியர்கள் தங்களினம் அல்லாதவர்களை சூத்திரர்கள் என்றும்; தமிழர்கள் தங்களினம் அல்லாதவர்களை மிலேச்சர்களென்றும் வழங்கிவருவது இயற்கை.

ஆகையினாலே, ஆரியர்கள் தமிழர்களைச் சூத்திரர் என்றால் சூத்திரர்க ளாகமாட்டார்கள். ஆரியர் அல்லாதவர் என்று அர்த்தமாகுமே யொழிய வேறன்று.

ஆகையால், தமிழ்ப் பிரிவினைகள் வேறு. ஆரிய நான்குஜாதிப் பிரிவினைகள் வேறு. ஆகையால், தமிழர்கள் தாங்கள் ஆரிய நான்கு ஜாதிகளுக்குள் சேர்ந்தவர் அல்லர் எனக் கண்டிப்பாய்க் கூறலாம்.

புறவுரை முற்றும்.

கணபதி துணை.

# விபூதி விளக்கம்.

## முதலாம் அத்தியாயம்.

### விபூதிவகை.

1. விபூதி இருவகைப்படும்:—அதாவது இயற்கை விபூதி, செயற்கை விபூதி.

### அகற்பம்.

2. இயற்கை விபூதி அகற்பம் எனப்பெயர் பெறும்.

3. செயற்கை விபூதி இருவகைப்படும்:—அதாவது வைதிக விபூதி, இலௌகிக விபூதி

### வைதிக விபூதி 2 விதம்.

4. வைதிக விபூதி இருவகைப்படும்:—புராதனி, சத்தியோ ஜாதை.

### இலௌகிக விபூதி 2 விதம்.

5. இலௌகிக விபூதி இருவகைப்படும்:—சைவம், அசைவம்.

### சைவ விபூதி.

6. சைவம் மூன்றுவகைப்படும்:—கற்பம், அநுகற்பம், உபகற்பம்.

ஆக விபூதிவகைகள் 7:—அகற்பம் (1) புராதனி (2) சத்தியோசாதை (3) கற்பம் (4) அநுகற்பம் (5) உபகற்பம் (6) அசைவம் (7)

மேற்சொல்லிய 7 வகை விபூதிகளில் ஒவ்வொன்றிலும் 5 வகைகள் உண்டு:—

அதாவது:—நீலநிறம், தாமிரநிறம், செந்நிறம், பொன்னிறம், வெண்ணிறம்.

### 35. வித விபூதிகள்.

ஆக 7×5=35 வித விபூதிகள் உண்டு எனத் தெரியவருகிறது.

## இரண்டாவது அத்தியாயம்.

விபூதி உற்பத்தி.

### அகற்பம்.

இடி விழுந்த இடத்தில் உண்டாகிய திருநீறும்; மலைபுச்சியிலும், பூமியிலும் ஏதாவது ஒரு காரணத்தினுல் விளைந்த திருநீறும் அகற்பம் என்று சொல்லப்படும்.

### புராதனி.

வைதிக விபூதியின் பிரிவாகிய புராதனி பிரமன் ஓமகுண்டத்தில் விளங்குவது.

### சத்தியோசாதை.

சத்தியோசாதை ஆரிய பிராமணர் ஓமகுண்டத்தில் உண்டாவது.

சைவத்தின் பிரிவாகிய கற்பம் செய்யப்படும் முறை:—

### கற்பம்.

கன்று ஈணுத பசு, இளங்கன்றுப்பசு, கன்றிழந்தபசு, மலட்டுப்பசு, இரட்டைக் கன்றுகள் ஈன்ற பசு, கன்று முற்றின பசு, சினைப்பசு, செவியுறுப்புக்குறைந்தபசு, கோடில்லாத பசு, அல்லது குறைந்த கோடுள்ளபசு, குறைந்த வாலுடைய பசு, பவ்வியுண்ணும் பசு, நோயுள்ளபசு, கிழட்டுப்பசு, என்னும் இவைகளை விட்டு பங்குனி மாதத்தில் நெல்லரிந்த கழனிகளில் உள்ளதாளை மேய்ந்த நல்ல பசுக்கள் விட்ட மயத்தை எட்டாந்திதி, பதினான்காந்திதி, பதினைந்தாந்திதிகளிலே சத்தியோசாத மந்திரத்தினலே பூமியில் விழுமுன்னமே தாமரை இலையில் ஏற்று * வழும்பு நீக்கி வாமதேவ மந்திரத்தால் (1) ஆனைந்து பெய்து, அகோரத்தினுற் பிசைந்து, தற்புருடத்தினுல் திரட்டி, ஓமாக்கினியில் இட்டு, ஈசா

---

* வழும்பு நீக்கிக்கொள்வது = பௌஷ்டிகம். கோமயம் இடும்போது பிற்றட்டிலே கைவைத்தேற்பது = சாந்திகம். பூமியில் விழுந்தபின் எடுப்பது காமதம். என்று போதாயன கல்பசூத்திரம் கூறும்.

[1] ஆனைந்து = கோமயம், கோசலம், பால், தயிர், நெய் = 5

னத்தால் எடுத்து, புதிய வஸ்திரத்தினுல் வடிகட்டி, புதியகடத்தில் நிறைத்து, (2) காயத்திரி மந்திரம் உச்சரித்து, பரிசுத்தமான இடத்தில் வைத்து, நறுமலர்சாத்தி, சுத்த வஸ்திரத்தினுல் வாய் கட்டி உபயோகப்படுத்துவதாம்.

(2) ஓமகுண்டத்திலிடாது உலர்த்தி விளைவித்தலும் விதியாம்.

அநுகற்பம்.

வனத்தில் உலர்ந்தமயத்தைச் சித்திரை மாதத்தில் கொண்டுவந்து, பொடித்து, அதில் கோசலம் பெய்து முன் கூறிய விதிப்படி விளைவித்தலாம்.

உபகற்பம்.

இயல்பாக அக்கினியினுலே தகிக்கப்பட்ட வனத்திலுள்ள பொடியில் ஆனைந்துபெய்து, முற்கூறிய விதிப்படி அக்கினியிலிட்டு எடுத்தலாம்.

இது காறும் சைவ விபூதியின் உற்பத்தி கூறினும். இனி அசைவ விபூதியின் உற்பத்தி கூறுவாம்.

அசைவ வீபூதி.

(1) திருக்கோயில் மடைப்பிள்ளியில் தோன்றுவது.

(2) திருவடியார் மடாலயத்தின் மடைப்பள்ளியில் உண்டாவது.

(3) வனத்தில் வெந்து உபகற்ப முறைப்படி செய்யாதது.

## மூன்றும் அத்தியாயம்.

### விபூதியின் குணம்.

மேலே கூறிய எழுவகை விபூதிகளில் ஒவ்வொன்றிலும் ஐவகை (5 வகை) விபூதிகள் உண்டு என்று முன்னமே கழறினும். அவைகளில்:—

(1) கருநிறம் அல்லது நீலநிறத்தை உடைய விபூதியைத் தரித்தால் நோயை உண்டாக்கும்.

---

[2] காயத்திரி = சிவகாயத்திரி.

(2) புகைநிறம் அல்லது தாமிரநிறத்தை உடைய விபூதியைத் தரித்தால் ஆயுளை அழிக்கும்.

(3) செந்நிற விபூதியைத் தரித்தால் புகழைப் போக்கும்.

(4) பொன்னிற விபூதியைத் தரித்தால் தரித்திரத்தைச் சேர்க்கும்.

(5) வெண்ணிற விபூதியைத் தரித்தால் புண்ணியத்தை விளைவிக்கும்.

**N. B.**—ஆகையால் வெண்ணிற விபூதியையே யாவரும் தரிக்கவேண்டியது என்பது இதனால் தெரிவிக்கலாயிற்று.

---

## நான்காம் அத்தியாயம்.

### விபூதி உரிமை.

இன்னார் இன்னவிபூதி தரிக்கவேண்டுமென்பது.

தமிழ் ஆதிசைவர்களாகிய பரம்பரைச் சைவர்களுக்கு கற்ப விபூதியும், தமிழ் அநு சைவர்களுக்கு அநுகற்ப விபூதியும்.

தமிழ் அவாந்தர சைவர்களுக்கு உபகற்ப விபூதியும்.

தமிழ் அந்திய சைவர்களுக்கும், பிறவர சைவர்களுக்கும் அசைவ விபூதியும் உரித்து.

ஆரிய ஜாதியைச்சேர்ந்த பிராமண க்ஷத்திரிய, வைசியர்களுக்கு வைதிக விபூதியும்.

ஆரிய ஜாதியைச் சேர்ந்த சூத்திரர்களுக்கு ஆரியர் மடைப் பள்ளி விபூதியும்.

ஆரியரில் கோளக, குண்டக, அநுலோம, பிரதிலோம, சங்கர ஜாதிகளுக்கு வனத்தில் வெந்த விபூதியும் உரித்து.

---

Vide:—வாசிட்டலிங்கம்

गौणं नानाविधं भस्मविद्धि ब्रह्मविदांवर ।
अग्निहोत्र समुद्भूतं दावानलं समुद्भवम् ।
त्रैवर्णिकानां सर्वेषा मग्निहोत्र समुद्भवम् ।
विरजानलजं चैवधार्यं भस्म महामुने ।

## ஐந்தாம் அத்தியாயம்.

### விபூதி இன்னர் முன்னும் இன்ன இடத்திலும் தரிக்கக்கூடாது என்பது.

விபூதியைப் பற்றிய வேறு வரலாறுகள்:—அக்கினி, தேவர், குரவர் இவர் முன்னும்,

வழி, அசுத்த நிலம் இவற்றிடத்தும்.

இழிஞர் முன்னும் தரிக்கக்கூடாது.

சண்டாளர், பாவிகள் இவர்கள் முன்னும், நடக்கும்போதும் தரிக்கக்கூடாது.

**N. B.** தேவர், குரவர் முதலியோர் முன்பு தரிக்கவேண்டுமானல் முகத்தைத் திருப்பிநின்று தரித்தல்வேண்டும்.

---

औपासन समुत्पन्नं गृहस्थानां विशेषतः ।
समिदग्निसमुत्पन्नं धार्यं वै ब्रह्मचारिणाम् ।
शूद्राणां श्रोतियागा रपनाग्नि समुद्भवम् ।
अन्यषा मपिसर्वेषां धार्यं दावानलोद्भवम् ।

இ-ள். பிரமவித்துக்களின் சிறந்தவனே! பஸ்மாவானது கௌணமாயும், நாநாவிதமாயும் சொல்லப்பட்டிருக்கிறது. (1) அக்நிஹோத்திரத்திலிருந்தும், (2) விரஜாஹோமத்திலிருந்தும், (3) ஔபாசனக்கிநியிலிருந்தும், (4) காட்டுத்தீயிலிருந்தும் உண்டாகிறது முண்டு. முதல் மூன்று வருணத்தாருக்கும் (1) அக்கிநிஹோத்ரத்திலிருந்து உண்டானதும் விரஜாநலத்திலிருந்து உண்டானதுமான பஸ்மா முக்கியமாகத்தரிக்கத்தகும்; கிரகஸ்தர்களுக்கு ஔபாசனக்கிநியிலிருந்து உண்டான பஸ்மாவையும், பிரமசாரிகளுக்கு ஸமிதாக்கிநியிலிருந்துண்டான பஸ்மாவையும், சூத்திரர்களுக்குப் பிராமணர்களுடைய வீட்டில் பசனக்கிநியிலிருந்துண்டான பஸ்மாவையும் இதிற் சொல்லப்படாத மற்றெல்லாருக்கும் காட்டுத்தீயிலிருந்துண்டான பஸ்மாவையும் தரிக்கத்தகும் பஸ்மமென்று நூல்களிற் சொல்லப்படுகின்றது.

N. B:—இதில் கற்ப, அநுகற்ப, உபகற்பமுறைகள் கூறப்படாததைக் கவனிக்கத்தக்கது. ஆரியர்களுக்கு இம்முறை முற்றும் தெரியாதென்று அறியக்கிடக்கின்றது. தமிழர்களுடைய விபூதிமுறைவேறு, ஆரியர்களுடைய பஸ்மாமுறை வேறு என்பதை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைக்க வேண்டியது.

---

### எப்பேர்ப்பட்ட விபூதி தரிக்கலாகாது.

ஒருகையால் ஏற்ற விபூதி; விதிப்படி இயற்றா விபூதி; விலை விபூதி; அதீக்ஷிதர்கள் கொடுத்த விபூதி; அசைவர்கள் கொடுத்த விபூதி.

### எப்படி விபூதியைத் தரித்தல்வேண்டும்.

பூமியில் வீழ்த்தாமலும்; அங்காத்தலும், தலைநடுக்கலும், கவிழ்த்தலும், செய்யாமலும்; அண்ணாந்து மூவிரலாலும் எடுத்து சிரமுதலிய தானங்களில் அததற்குரிய மந்திரங்களைச் சொல்லி அணியக்கடவர்.

**N. B.** விபூதி சிந்தினால் சிந்திய விபூதியை இருதய மந்திரத்தால் எடுத்துவிட்டு அந்தத் தலத்தை கோமயத்தால் சுத்தி செய்தல்வேண்டும்.

### விபூதி தாரணம்.

உத்தூளனம் திரிபுண்டரம் என இருவகைப்படும்.

### உத்தூளனம்.

அந்தணர் (தமிழ்நாட்டுத் துறவிகள் = அறவோர் எனச்சொல்லப்படுவோர். ஆரிய பிராமணர் அல்லாதவர்) உருவமுழுவதும்; ஏனைய தமிழர் நாபிக்கு மேலும் உத்தூளனம் செய்க.

**N. B.** இது (உத்தூளனம்) * பத்துவகை ஸ்நானங்களில் ஒன்று. ஆக்நேய ஸ்நானமெனக் கூறுநிற்பர். அக்கினி சம்பந்தமான பஸ்மத்தால் உத்தூளனம் செய்வது ஆக்நேய ஸ்நானம்.

### திரிபுண்டரம்.

மூவிரலால் விபூதியை எடுத்து குறித்த இடங்களில் வளையாமலும், இடையறாமலும் ஒன்றை ஒன்று தீண்டாமலும் குறித்த அளவுப்பிரகாரம் தரிப்பது.

---

*

1. வாருண ஸ்நானம் = ஜலத்தில் மூழ்குவது
2. ஆக்நேய ஸ்நானம் = பஸ்ம உத்தூளனம்
3. மந்திர ஸ்நானம் = சத்தியோ ஜாதாதி மந்திரங்களை உச்சரிப்பது or அகமர்ஷணம்
4. மானச ஸ்நானம் = பிரணவோச்சாரத்துடன் தியானிப்பது

N. B.
3. ———————— }
2. ———————— } திரிபுண்டரம்
1. ———————— }

| | 1-வது வரி. | 2-வது வரி. | 3-வது வரி. |
|---|---|---|---|
| பிரணவத்தில் | அ | உ | ம் |
| வேதத்தில் | இருக்கு | யசுர் | சாமம் |
| குணத்தில் | இராசதம் | சாத்துவிகம் | தாமதம் |
| பொருளில் | பொறியாதிகள் | ஆன்மா | பரமான்மா |
| சத்திகளில் | கிரியாசத்தி | இச்சைசத்தி | ஞானசத்தி |
| அதிதேவதைகளில் | மகாதேவர் | மகேசுரர் | சிவம் |
| அக்கினியில் | காருகபத்தியம் | தக்ஷுணாக்கினி | ஆகவனீயம் |

என்பவற்றின் மயமாக விளங்கும் திரிபுண்டரம் எனக்கூறு நிற்பர் சிலர். இவை ஆரியர் வந்தபின் ஏற்பட்டவை என அறியக் கிடக்கின்றது.

---

கௌணஸ்நானம்.

5. திவ்விய ஸ்நானம் or மகேந்திர ஸ்நானம் = சூரிய கிரணத்துடன் தோற்றிய மழையில் கிழக்காக 7-அடி நடப்பது.

6. மாருத ஸநானம் or வாயவ்ய ஸநானம் = காற்றிற் கலந்த பசுவின் பாததூளியில் எதிரிட்டுச் செல்லுவது.

7. பார்த்திப ஸநானம் = சிவாலயம் அல்லது நதிகளில் உள்ள மிருத்திகையைக் குழைத்து திரிபுண்டரமாகத் தரித்தலும், குழைத்த தீர்த்தத்தைப் புரோக்ஷித்துக் கொள்ளலுமாம்.

8. கௌரவ ஸநானம் = ஆசிரியர் பாததீர்த்தத்தில் மூழ்குதலும், தீர்த்தத்தை புரோக்ஷித்துக் கொள்ளலும் உட்கொள்ளுதலுமாம்.

புதியன புகுத்தல்.

9. காபிலஸநானம் = ஈரவஸதிரத்தால் சர்வாங்கமும் துடைத்துக்கொள்வது.

10. பாரிசஸநானம் = கங்கைமுதலிய புண்ணிய தீர்த்தங்களைச் சிரசில் புரோக்ஷித்துக் கொள்வது. இவ்வகைகள் காமிகத்தும் சைவ பூஷணத்தும் கண்டன.

## விபூதி தரிப்பது அவசியம்.

விபூதி தரித்தே அறமாதிகள் புரிதல்வேண்டும்; திருநீறு தரியாதவர் முகம் சுடுகாடொக்கும்;

"பூதிகொண்டோர் வாளாங்கிருந்திடினும்
விறுதவமாதிக ணிரம்பவிளைத்தோராவர்"

"பூதியணியார் முகம்புறங்காடு"

"நீறில்லா நெற்றிபாழ்"

என்பதனையும் உற்றுநோக்குக.

திருநீறு தரியாதவர்களுடைய முகத்தைப் பார்த்தவர்கள் பஞ்சாக்கரத்தில் 100 உரு ஜெபிக்கவேண்டும். விபூதிதரியாது தவமுதலியவை நிரம்பச்செய்தாலும் பயனில்லை. தரித்தவர் சும்மா இருந்தாலும் பயன்பெறுவர். திருநீறு தரித்தே திவசமாதிகள் புரிக.

## விபூதியை எதில் வைத்துக்கோள்வது.

மான்றோல்; புலித்தோல்; பட்டுவஸ்திரம்; இவைகளாற் பன்னிரு விரலளவு உயரமும், எண்விரல் அளவு அகலமும், வாய் வட்டமுமாக அமைத்த ஆலயத்தில் வைத்துக்கொண்டு தரிக்க வேண்டும்.

---

திரிபுண்டரம்.

வைணவத்தைக் கண்டித்திருக்கிறது.

வடமொழி ஸகாந்தம்.
विनापुण्ड्रांतरं
मोहाद्धारयन् पतति द्विजः ॥
இ-ள். மோஹத்தினலே பஸம த்ரிபுண்ட்ர மணியாமல் வேற புண்ட்ரந் தரிப்பானாயின், (பிராமணனாயினும்) பதிதனாய்விடுவான்.

மாத்வமதத்தையும் சந்தனத்தை விபூதிபோல் இடும் ஸ்மார்த்தர்களையும் கண்டித்திருக்கிறது.

காருடபுராணம்.
भस्मनैवप्रकुर्वीत न कुर्यान्मृत्तिकादिभिः ॥
இ-ள். பஸமத்தினலே புண்டரந் தரிக்க வேண்டும் மிருத்திகை, சந்தனம் முதலியவற்றால் புண்டரம் தரிக்கலாகாது.

பொன்னாலாவது, வெள்ளியினாலாவது, தாமிரத்திலாவது சம்புடங்கள் செய்து அதில் வைத்துக்கொண்டு தரிப்பதும் உண்டு. இதுதவிர,

பித்தளை முதலிய சம்புடங்களில் வைத்துக்கொண்டு தரிப்பதும் உண்டு. அதான்றியும்.

வில்வக்குடுக்கை, சுரக்குடுக்கைகளிலும் வைத்துக்கொண்டு தரிப்பதும் உண்டு.

**N. B.** குடுக்கைகளினன்றிப் பிறவற்றில் உள்ள விபூதியைக் கவிழ்க்கலாகாது.

## விபூதியிடும் இடங்களும் அளவும்.

சிரம், நெற்றி, மார்பு, கொப்பூழ், முழந்தாள்கள் இரண்டு, புயங்கள் இரண்டு, முழங்கைகள் இரண்டு, மணிக்கட்டுகள் இரண்டு, விலாப்புறம் இரண்டு, முதுகு, கழுத்து என்னும் 16 ஸ்தானங்களாம்.

இவைகளுள் விலாப்புறம் இரண்டையும் நீக்கி காதுகள் இரண்டையும் கொள்வதும் உண்டு.

முழங்கைகளையும் மணிக்கட்டுகளையும் நீக்கிப் பன்னிரண்டு தானங்கள் கொள்வதும் உண்டு.

நெற்றியில் ஆறு அங்குலமும் (அதாவது இரண்டு கடைப் புருவ எல்லைவரை) மார்பிலும், புயங்களிலும் அவ்வாறங்குலமும், மற்றைத் தானங்களில் ஒவ்வோர் அங்குலமும் தரித்தல்வேண்டும்.

இவ்வளவுகளில் கூடினும் குறையினும் குற்றமாம்.

## விபூதி தரிக்கும் காலங்கள்.

சந்தியாகாலம் நான்கிலும், சூரியோதயத்திலும், சூரியாஸ்தமனத்திலும், ஸ்நானம் செய்தவுடனும், பூசைக்கு முன்னும் பின்னும், நித்திரைக்கு முன்னும் பின்னும், மலசல மோசனஞ்செய்து, சௌசம்பண்ணி ஆசமித்த பின்னும், தீக்ஷையில்லாதவர் தீண்டியபோதும், பூனை, கொக்கு, எலி முதலியன தீண்டியபோதும், நாய், கோழி, கழுதை, சண்டாளன் இவர்களைப் பார்த்தபோதும்,

இரவில் கெட்ட கனவுகாணில் விழித்து எழுந்தவுடனும், அவசிய மாகத் தரித்தல்வேண்டும்.

### விபூதிவாங்கும் முறைமை.

ஆசாரியராயினும், சிவனடியாராயினும், விபூதிதந்தால் மூன்றுதரமாயினும், ஐந்துதரமாயினும், நமஸ்கரித்து எழுந்து கும்பிட்டு இரண்டுகைகளையும் நீட்டி வாங்கித் தரித்துக்கொண்டு முன்போல மீட்டும் நமஸ்கரித்தல் வேண்டும்.

விபூதிகொண்டுவந்தவர் தீக்ஷை முதலியவற்றினால் தம்மின் உயர்ந்தவராயின் அவரை நமஸ்கரித்து வாங்கித் தரித்தல்வேண்டும்; அப்படிப்பட்டவர் அல்லராயின் அவ்விபூதிப் பிரசாதத்தை ஒரு பாத்திரத்தில் வைப்பித்து அதனைப் பத்திர புஷ்பங்களால் அருச்சித்து, நமஸ்கரித்து எடுத்துத் தரித்தல்வேண்டும்.

### விபூதியை யார் யார் எவ்விதம் எப்போது தரித்தல்வேண்டும்.

தீக்ஷையுடையவர்கள் சந்தியாகால நான்கிலும் சலத்திற் குழைத்துத் தரிக்கலாம். மற்றைக் காலங்களில் சும்மா தரித்தல் வேண்டும.

தீக்ஷையில்லாதவர் மத்தியானத்துக்குப்பின் சலத்தில் குழையாமலே தரித்தல்வேண்டும், மத்தியானத்துக்கு முன் சலத்தில் குழைத்துத் தரிக்கலாம்.

## ஆறும் அத்தியாயம்.

### விபூதியின்பெயர்க் காரணமும் வடிவும்.

நீறு, விபூதி, சாரம், பசிதம், காப்பு என்னும் பல திவ்ய நாமங்களையுடையது விபூதி.

பஸ்மம் = பசுமம் = நீறு:— ஒருபொருட் கிளவிகள்.

இரக்ஷை = காப்பு — ஒருபொருட் கிளவிகள்.

காரணம்.

| | |
|---|---|
| பாவத்தை நீற்றலால் | நீறு |
| செல்வத்தைத் தரலால் | விபூதி |
| உயிர்களின் மலக்குற்றத்தைக் கழுவலால் | சாரம் |
| அறியாமைநீங்க விளக்குதலால் | பசிதம் |
| பூதாதிகளைப் போக்கிக் காத்தலால் | காப்பு |

வடிவு.

திருநீற்றின் வடிவு பராசத்தி வடிவு எப்படியெனில்,

"திருநீறெடுக்கும் பிரமாணமேது திறந்திடக்கை
தருநீறுசுத்தி தருவிப்பதேது தனியுருவென்?"

என்னும் கலித்துறையில் "தனியுருவென்" என்று எழுந்த வினவுக்கு விடையாக "பேசும் வடிவு பரைவடிவாம்" எனக் கூறுமாற்றானும்,

அகத்தியமுனிவர் தாம் திரட்டியருளிய தேவாரத்திரட்டில் நீற்றுப்பதிகம் "பரையின் வரலாறு" என்று அருளிச்செய்து, நான்முகத்து,

"நீற்றுப்பதிக நிகழ்த்துங்காலை
மாற்றுப்பரையின் வரலாறாகும்"

எனத் திருவாய்மலர்ந்தருளினமையானும் அறிக.

## ஏழாம் அத்தியாயம்.

### தத்துவார்த்தம்.

சைவானுட்டானத்தில் அஸ்திர சந்திபோபாசனமாகிய கன்மமலநீக்கக் கிரியையும்,

ஆசமனமாகிய மாயாமலநீக்கக் கிரியையும், முன்வைத்து,

சகளீகரணமாகிய மந்திர சிவசொரூப விளக்கக் கிரியைப் பின்வைத்து,

பஸ்மஸ்நானத்தை இடைவைத்ததின் நோக்கம் என்னவெனில்,

கன்மமாயைகள் நீங்கிய பின்மலம் பரிபாகமாகி, அதற்கேற்ப சத்திநிபாதம் விளைந்து அதுகாறும் மலத்தைப் பாகப்படுத்திநின்ற திரோதாயி சக்தி செயலற்று நீங்க அருட்சத்தியாகிய பராசத்தி இராவிருளின் செறிவை யொழித்து எழும் ஆதித்தப் பிரகாசம் போல ஆணவமல இருளை நீக்கிப் பிரகாசிக்குமாகலின், அந்நிலை தரும் பராசத்தியின் மூழ்குதலாகிய பஸ்மஸ்நானம் ஆண்டுவேண்டப்படுவது என்பது பற்றியேயாம்.

பராசத்திப் பிரகாசத்தில் ஆன்மா முழுகிக் கலந்தாலன்றி ஆணவ இருள் பிறிதோன்றானும் நீங்கமாட்டாமையின் ஆணவ மல நீக்கத்துக்கு விபூதி ஸநானம் இன்றியமையாது வேண்டப்படுவதொன்றாம்.

இவ்வருட்பேற்றிற்கு அருகரல்லார் விபூதிஸ்நானம் இன்றியும் சந்திசெய்வர். அவரையெல்லாம் பற்றி இங்கு கூறுவான் புகுந்தாம் அல்லேம்.

சைவர்க்காயின் விபூதிஸ்நானம் இன்றிச் சந்தியாவந்தனமே முடியமாட்டாது.

இனி, விபூதிஸ்நானம் பராசத்தி விளக்கத்தின் பின்பே சிவ வடிவம் வாய்க்குமாகலின் சகளீகரணம் அதன்பின்பு வைக்கப்பட்டது.

இவ்வமைவானும் விபூதி பராசத்தி வடிவமென்பது பெறப்பட்டது காண்க.

விபூதி விளக்கம் முற்றும்.